# குளித்தலை நகராட்சி

16.08.2019.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

**பொருள்– 01.** குளித்தலை நகராட்சி பொது பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு அலுவலக உபயோகத்திற்கு பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இணைப்புகள் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் பயன்படுத்தக்கூடிய அலுவலக கைபேசி இணைப்புகளுக்கு உரிய கட்டணங்கள் செலுத்துவதற்கு 2019–2020.ஆம் நிதி ஆண்டுக்கு உத்தேச செலவினம் ரூ.150000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி செலவினம் ரூ.1,50,000/–ஐ,(ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.826/2019/பி1)

**பொருள்– 02.** குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் தபால் தலைகளுக்கு 2019–2020.ஆம் நிதி ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.18000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி செலவினம் ரூ.18,000/–ஐ, பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3253/2019/டி2)

**பொருள்– 03.** குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதி 2016.ன்படி அமுல்படுத்த, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2288/2019/பி3, நாள்–25.03.2019.ன்படி செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் சம்பந்தமாக மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி அரசு கிளை அச்சகம், திருச்சி–15 அலுவலகத்திலிருந்து, மாவட்ட அரசிதழ் பிரசுரம் கட்டணம் ரூ.21,000/– மேற்கண்ட அலுவலகத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). மேற்கண்ட செலவினங்கள் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று இச்செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.660/2019/எச்1)

**பொருள்– 04.** குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் பயோமைனிங் மற்றும் FSTP பயன்பாடுகளுக்கு தனி மின் இணைப்பு பெறப்பட்டு உரக்கிடங்கின் அனைத்து பயன்பாடுகளும் அதில் இருந்து செயல்படுத்தப்படுகிறது. எனவே, பயன்பாட்டில் இல்லாத 7 மின் இணைப்புகள்

| | | |
|---|---|---|
| அ) துண்டிப்பு செய்வதற்கான கட்டணம் | ரூ. | 2148 |
| ஆ) நாளதுவரை நடப்பு மின் கட்டணம் | ரூ. | 20267 |
| மொத்தம் | ரூ. | 22415 |

(ரூபாய் இருபத்து இரண்டு ஆயிரத்து நானூற்று பதினைந்து மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1867/2019/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பகுதியில் பேரிடர் மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும், குடிநீர் மற்றும் மின் பணியாளர்களின் பணிக்கு தேவையான 19 இனங்களிலான உபகரணங்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகம் லிட்., சென்னை–58 நிறுவனத்தாரின் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி ரூ.4,20,000/– மதிப்பீட்டிலான 18% GST உள்பட்ட செலவினம் மேற்கொண்டு அத்தியாவசிய உபகரணங்களை அவசர அவசியம் கருதி மேற்படி அரசு நிறுவனம் மூலம் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1061/2019/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிக்கு தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தின் நிலுவைகள் குறித்து ஆணையர்(பொ) அவர்களின் உத்தரவின்பேரில், நேரிடையாக ஒத்திசைவு செய்யப்பட்டது. அதன்படி 128 மின் இணைப்புகளுக்கு மின் இணைப்பு வைப்புத் தொகை ரூ.4,72,166/– மற்றும் இதர கட்டணங்கள் ரூ.2980/–ன் கூடுதல் ரூ.4,75,146/–ஐ, தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்திற்கு செலுத்த வேண்டி உள்ளது. மேற்படி தொகையினை செலுத்தி அரசு நிதியிலிருந்து ஈடுசெய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1739/2019/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பகுதியில் அரசு மருத்துவமனை வளாகத்தில் பார்வையாளர்கள் தங்க NULM திட்டத்தில் சிறப்பு தங்குமிடம் அமைக்கும்பணி நடவடிக்கையில் உள்ளது. அதன் கட்டமைப்பு வடிவம் குறித்த அறிக்கை தயார் செய்து வழங்கும் பணிக்கு, இயக்குநர் CTDT அண்ணாபல்கலை கழகம், சென்னை–25 பெயரில் ரூ.41,300/–ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1804/2017/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் கடம்பன்துறை, பெரியபாலம் பகுதிகளில் ஆடி 18 பண்டிகையை முன்னிட்டு, சாமியானா பந்தல் அமைத்து, பொதுமக்கள் பயன்பெறும் வகையில், மருத்துவ முகாம் நடத்த சேர், டேபிள், சாமியானா பந்தல் ஏற்பாடுகளுக்கான செலவினம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரருக்கு ரூ.5000/– பட்டியல் தொகை வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1839/2019/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு பகுதியில் 08.08.2019 தேதியன்று பலத்த காற்றினால் சுற்றுசுவர் மற்றும் அதன்மேல் அமைந்துள்ள தகடுகள் விழுந்துவிட்டது. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ், அகற்றி நகராட்சி உரக்கிடங்கில் பாதுகாப்பாக அடுக்கி வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்பட்டியல் தொகை ரூ.25,000/–ஐ, திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரருக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2019/இ1)

..3..

பொருள்– 10. குளித்தலை நகராட்சிப் பகுதியிலான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் குப்பைகளை அகற்றும் பணிக்கு 100 குதிரை திறன் கொண்ட மின் இணைப்பு பெற வேண்டி உள்ளது. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொண்டதையும், திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.4607/2018/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பகுதிக்குட்பட்ட காவிரிவரை ஓரம் உள்ள தென்கரை வாய்க்காலில் கழிவுநீர் கலக்கும் ஐந்து இடங்கள் கண்டறியப்பட்டு கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, பாசன வாய்க்காலில்விட ஏதுவாக திரவ கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் ஏற்படுத்த ரூ.54.80 லட்சம் செலவினத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான தொகையை நகராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு மூலதன மான்ய நிதி 2019–2020.ல் அல்லது அரசு நிதியிலிருந்து முழுமான்யத்துடன்கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு மேலனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.624/2019/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

16.08.2019.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 155 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 156 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 157 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 158 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 159 | நிதி நிலையை கருத்தில்கொண்டு 2020—21 நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. |
| 6 | 6 | 160 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 161 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 162 | பதிவு செய்யப்பட்டது. |
| 9 | 9 | 163 | பதிவு செய்யப்பட்டது. |
| 10 | 10 | 164 | பதிவு செய்யப்பட்டது. |
| 11 | 11 | 165 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/—மு.கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.